குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.90/2020

அ.சா.4

2025–ம் ஆண்டு நவம்பர் 11–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னப்பன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.18 மணி,

Accused Mathalaimuthu present. Advocate Mr.Sabarinathan present for Advocate Mr.Balasubramanian for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் புளியம்பட்டியில் குடியிருந்து, ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.09.2019 ஆம் தேதி ஓமலூர் – மேட்டூர் சாலையில் உள்ள பி.பி.எஸ் காம்ப்ளக்ஸில் காலை சுமார் 10.00 மணியளவில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போது போலிசார் அங்கு வந்து, பி.பி.எஸ் காம்பளக்ஸிற்கு எதிரே விபத்து நடந்தது குறித்து தெரியுமா என்று கேட்டார்கள். நான் தெரியும் என்று சொன்னேன்.

2. அதன்பின்பு, மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்வதற்கு சாட்சியாக இருக்குமாறு சொன்னார்கள். பின்பு, விசாரணை செய்து, கையெழுத்து கேட்டார்கள். நானும். எனக்கு முன்பாக சாட்சியம் அளித்த அ.சா.3 அர்ஜுனன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:32:06 +0530

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.21 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:32:08 +0530